**சார்பு நீதிமன்றம், சீர்காழி.**
**OS. 51/2022 Connected os 268/2022**

பெயர் : வைத்தியநாதன் (DW1) (Cross )

த/க/பெ. :

தேதி : 11.11.2025

ஆஜராகி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

**வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

மணிவாசகம் வகையறா மீது சீர்காழி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் OS 323/2018 வழக்கு போட்டேன் என்றால் சரிதான். அந்த இந்த நீதிமன்றத்திற்கு OS 268/2022 ஆக நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். அந்த வழக்கில் வழக்கறிஞருக்கு விபரம் நான்தான் கூறினேன் என்றால் சரிதான். என்னுடைய ஜவுளி வியாபாரம் என்றால் சரிதான், சுமார் 25, 30 வருடமாக சென்னையில் தொழில் செய்து வருகிறேன் என்றால் சரிதான். OS 268/2022 பிராதில் குறிப்பிட்ட முகவரியில் தான் நிரந்தரமாக வசிக்கிறேன் என்றால் நான் அங்கு நிரந்தரமாக வசிக்க வில்லை நான் பிறந்தது வைத்திஸ்வரன் கோவில். வழக்குரை முகவரியில் 1992 முதல் வசித்து வருகிறேன். என்னுடைய ஆதார் குடும்ப அட்டை, சென்னை திருவல்லிகேணியில் முகவரியில் உள்ளது என்றால் சரிதான். வைத்தீஸ்வரன் கோவில் முகவரியில் இருந்து சென்னை முகவரிக்கு மாற்றி கொண்டேன். அவ்வாறு முகவரி மாற்றம் செய்ததற்கான ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் சகோதரரர் பெயர் சுப்ரமணியன். OS 51/2022 வழக்கில் அவர் 2ம் பிரதிவாதி என்றால் சரிதான். அவருக்கும் சேர்த்துதான் OS 51/2022 வழக்கில் எதிர் வழக்குரை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அவருக்காகவும் சேர்த்துதான் சாட்சியம் அளிக்கிளேன் என்றால் சரிதான். சுப்ரமணியன் ஆசிரியர் தொழில். தற்போது ஓய்வு பெற்று விட்டார். அவர் குடவாசல், மணல்மேடு, திருநாகேஸ்வரம், பட்டீஸ்வரம் ஆகிய இடங்களில் பணிபுரிந்தார். தற்போது அவர் வசிப்பது கும்பகோணம் பழவாத்தான் கட்டளை என்றால் சரிதான். பி வாசா 2 Settlement ஆவணம் என் சகோதரர் எழுதி வைத்தது என்றால் சரிதான். இந்த ஆவணம் செல்லாது என்று தான் ் வாதிகள் வழக்கு போட்டுள்ளார்கள் என்றால் சரிதான். அந்த Settlement ஆவணத்தில் வாதிகலோ அவர்களின் முன்னோர்கலோ கையெழுத்து போடவில்லை என்றால் சரிதான். Settlement அடிப்படையில் விளம்புகை பரிகாரம் கேட்டு வழக்கு போட்டுள்ளளேனா என்றால் அதற்கு அவசியம் இல்லை. OS 268/2022 வழக்கில் பிரதிவாதிகளின் எதிர்வழக்குரையை படித்து பார்த்தேன். அதில் உள்ள விவரங்களை மறுத்து மறுப்புரை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. OS 268 /2022 எதிர் வழக்குரையில் 16 பத்தியில் உண்மையான உரிமையாளர் மீது

உறுத்துகட்டளை பரிகாரம் கோர இயலாது என்று சொல்லியுள்ளார்கள் என்றால் சரிதான். அதன் பிறகும் விளம்புகை பரிகாரம் கோரவில்லை என்றால் அதற்கு அவசியம் இல்லை. என்னிடம் காண்பிக்கப்படும் பிவாசா 2 ஆவணத்தில் 2ம் பக்கத்தில் இதன் அடியில் சொத்து விபரத்தில் குறிப்பிட்டுள்ள சொத்து எனக்கு சொந்தமானது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிவாசா 2 ஆவணத்தில் கூட்டு குடும்ப முன்னோர்கள் சொத்து என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. OS 268/2022 வழக்குரையில் தாவா சொத்து சுப்ரமணியத்திற்கு பாத்தியபட்டு அவர் முன்னோர்கள் பல 12 ஆண்டுகளாக அனுபவித்து வந்துள்ளார்கள் என்று சொல்லியுள்ளேன் என்றால்சரிதான். யார் எதிராக அனுபவித்தார்கள் என்று தெரியவில்லை, எங்களுடைய சொத்து. முன்னோர் சொத்து என்பதை காட்ட முன்ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் பட்டா உள்ளது. என் சகோதரர் பெயரில் உள்ள பட்டா. OS 268/2022 பழைய புல எண் 460/10A புதிய எண் 18,18A. வாசாஆ 2ல் என் முன்னோர்கள் பெயரிலோ என் சகோதரர் பெயரிலோ பட்டா இருப்பதாக குறிப்பிடப்படவில்லை என்றால் எங்களிடம் பட்டா உள்ளது. இந்த ஆவணத்தில் இல்லை இது உங்கள் ஆவணம். 12.09.2018 ல் RDO உத்தரவு வாசாஆ 3 குறித்து எனக்கு தெரியும் என்றால் அது தவறான உத்தரவு. தவறான உத்தரவுக்கு எதிராக மேல்முறையீடு செய்துள்ளேனா என்றால் நீதிமன்றத்தில் தடை உத்தரவு வழங்கி அந்த தகவல் தெரிவித்த பிறகு நீதிமன்ற உத்தரவை மீறி தவறாக உத்தரவு பிறப்பித்துள்ளார். நீதிமன்ற தடை உத்தரவை குறியீடு செய்துள்ளேனா என்றால் அது வழக்கு கோப்பிலேயே இருக்கும். மயிலாடுதுறை கோட்டாட்சியர் உத்தரவை நிறுத்தி வைக்க நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளேனா என்றால் தவறான உத்தரவுக்கு எதிராக மேல்முறையீடு செய்துள்ளேனா என்றால் நீதிமன்றத்தில் தடை உத்தரவு வழங்கி அந்த தகவல் தெரிவித்த பிறகு நீதிமன்ற உத்தரவை மீறி தவறாக உத்தரவு பிறப்பித்துள்ளார். அந்த உத்தரவின் மீது மாவட்ட ஆட்சியரிடம் மேல் முறையீடு செய்துள்ளேன். நீதிமன்ற உத்தரவு படி நடக்க வேண்டும் என்று சொல்லியுள்ளார். மாவட்ட ஆட்சியரிடம் கொடுத்த மனுவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். OS 268/2022 வழக்கில் 24.08.2018 ஆஜராகுமாறு அழைப்பானை வந்ததாக வழக்குரை பத்தி 10ல் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். வாசாஆ 3 ல் பெறுநராக என் பெயர் மற்றும் தந்தை முகவரி குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் தவறுதலாக வழங்கப்பட்ட பட்டாவின் அடிப்படையில் பதிவு செய்யப்பட்டSettlement ஆவணத்தை சீர்காழி சார் பதிவாளர் ரத்து செய்யுமாறு குறிப்பிட்டபட்டுள்ளது என்றால் அது தவறான உத்தரவு. இந்த

உத்தரவின் பெயரில் தற்போது பட்டா வாதியின் முன்னோர்கள் பெயரில் மாற்றப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாதிகளின் குலதெய்வம் வைத்தீஸ்வரன் கோவில் என்றால் இருக்கலாம் வழக்கிற்கு பிறகுதான் வாதிகளை தெரியும். OS 268/2022 வழக்கை 1 முதல் 4 பிரதிவாதிகள் எதற்காக சேர்த்துள்ளோம் என்றால் எங்கள் சொத்தை கேட்டார்கள் அதனால் சேர்த்துள்ளேன். எப்போது கேட்டார்கள் என்பது நினைவில்லை தெரியாது. OS 51/2022 வழக்கின் வாதிகளும் நாங்களும் உறவினர்கள் இல்லை என்றால் சரிதான். மூகாம்பிகை என்பவர் எங்களுக்கு உறவினரா என்றால் இல்லை. இரு வழக்கிலும் எங்கள் முன்னோர்கள் யார் எந்த வகையில் சொத்தை அனுபவித்தார்கள் என்பதை சொல்லியுள்ளேனா என்றால் அதற்கு அவசியம் இல்லை. OS 51/2022 வழக்கு மோசடியானது என்று சொல்லியுள்ளேன் எங்கள் சொத்தை அபகரிக்க முயன்றதால் மோசடி என்று சொல்லியுள்ளேன். வழக்கு மோசடி என்று சொல்வதற்கு சட்டபடி நான் தடைசெய்யப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல. என்னிடம் காண்பிக்கப்படும் வாசாஆ 19 முதல் 23 வில்லங்க சான்றிதழ்களில் எங்கள் முன்னோர்கள் பெயரோ அதற்கு உண்டான ஆவணங்களோ காணப்படுகிறதா என்றால் அந்த ஆவணங்களை படித்து பார்க்க கால அவகாசம் தேவைப்படுகிறது.

இரு தரப்பு வேண்டுகோளுக்கு இணங்க பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.